DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | | |
| Miscellaneous | | |
| Preliminary Register | | |
| Sessions | : | **S.C.No. 117/2018** |
| Depositions of Witness for | : | Prosecution Pw 2<br>Defence<br>Court |
| Name | : | திரு. கணேசன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of August 2024.

(Accused present.)

<u>**முதல் விசாரணை**</u>

நான் மத்தளம்பாறையில் வசித்து வருகிறேன். விவசாய கூலி வேலை பார்க்கிறேன். அ.சா.1 ஐ தெரியாது. ஆஜர் எதிரியை தெரியாது. எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, கடந்த 29.02.2016 ஆம் தேதி நல்லமலை ராஜபாளையம் வருவதாக என்னையும் ராஜபாளையம் வரசொன்னார். நானும் மற்றும் என்னுடன் 9 நபர்கள் 2 காரில் மாலை ராஜபாளையம் சென்றோம். நல்லமலையும் ஜெகதீஷீம் ராஜபாளையம் புது பஸ் ஸ்டாண்டிற்கு வந்தார்கள் என்றும், நல்லமலையிடம் நைசாக பேசி நல்லமலையும் ஜெகதீசையும் தட்டப்பாறையில் உள்ள தீயணைப்பு துறையில் வேலை பார்க்கும், வெள்ளைத்துரையின் மாமா கணபதி தேவரின் தோப்பிற்கு அழைத்து வந்தோம் என்றும், இரவு 07.30 மணிக்கு கணபதி தேவரும் நல்லமலையையும் ஜெகதீஷையும் உட்கார வைத்து கருப்பு பணம் எல்லாம் வேண்டாம், நாங்கள் கொடுத்த பணத்தை தாருங்கள் என்று கூறினேன் என்றும், அப்போது எங்களுக்குள் வாய்த்தகராறு ஏற்பட்டது என்றும், அன்று இரவு 8 மணிக்கு நல்லமலை எங்களை பார்த்து கெட்ட கெட்ட வார்த்தைகளால் ஏசி, 2 கோடி ரூபாய் பணத்தை தாருங்கள் இல்லையென்றால் நடப்பது வேறு என்று கூறியதால், அதற்கு நாங்கள், நாங்கள் கொடுத்த பணத்தை கொடுக்கவில்லை என்றால் நீங்கள் ஊருக்கு போக முடியாது என்றும் கூறினோம் என்றும், நல்லமலை அதற்கு கோவப்பட்டு, அவரது இடுப்பில் மறைத்து வைத்திருந்த ரிவால்வரை எடுத்து எங்களைப்பார்த்து செத்து தொலைங்கல என்று சொல்லி கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் எங்களை பார்த்து மாறி மாறி சுட்டார் என்றும், அதில் 3 குண்டுகள் வெள்ளைத்துரையின் வயிற்றிலும் தொடையிலும் பட்டு ரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், அதில் வெள்ளைத்துரை மயங்கி கீழே விழுந்துவிட்டார் என்றும், நாங்கள் ஒரு காரில் வெள்ளைத்துரையை அவர் தம்பி கணேசன், மாரியப்பன் ஆகிய மூன்று பேரும் சங்கரன் கோவில் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு, நாங்கள் தோட்டத்தில் உட்கார்ந்திருந்தோம் என்றும் 1 மணி நேரம் கழித்து வெள்ளைத்துரையை மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி ஷீபா மருத்துவமனையில் கொண்டு சேர்த்தோம் என்றும், அங்கு மருத்துவர் காயம்பட்ட வெள்ளைத்துரையை பார்த்துவிட்டு, உயிருக்கு ஆபத்தான நிலையில் இருப்பதாக தெரிவித்தார் என்றும் மேலும் ஷீபா

மருத்துவமனையில் இருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**ஓம்/-S.மனோஜ்குமார்**
**கூடுதல் மாவட்ட நீதிபதி**
**தென்காசி**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | | |
| Miscellaneous | | |
| Preliminary Register | | |
| Sessions | : | **S.C.No. 117/2018** |
| Depositions of Witness for | : | Prosecution Pw 3<br>Defence<br>Court |
| Name | : | திரு. கணபதிதேவர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of August 2024.

(Accused present.)

**முதல் விசாரணை**

நான் ஊத்துமலை பக்கம் தட்டப்பாறையில் வசித்து வருகிறேன். விவசாய கூலி வேலை பார்க்கிறேன். அ.சா.1 எனக்கு தெரியும் எனது உறவினர். ஆஜர் எதிரியை தெரியாது. எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, கடந்த 29.02.2016 ஆம் தேதி நல்லமலை ராஜபாளையம் வருவதாக என்னையும் ராஜபாளையம் வரசொன்னார். நானும் மற்றும் என்னுடன் 9 நபர்கள் 2 காரில் மாலை ராஜபாளையம் சென்றோம். நல்லமலையும் ஜெகதீஷீம் ராஜபாளையம் புது பஸ் ஸ்டாண்டிற்கு வந்தார்கள் என்றும், நல்லமலையிடம் நைசாக பேசி நல்லமலையும் ஜெகதீசையும் எனது தோப்பிற்கு அழைத்து வந்தோம் என்றும், இரவு 07.30 மணிக்கு நானும் நல்லமலையையும் ஜெகதீஷையும் உட்கார வைத்து கருப்பு பணம் எல்லாம் வேண்டாம், நாங்கள் கொடுத்த பணத்தை தாருங்கள் என்று கூறினேன் என்றும், அப்போது எங்களுக்குள் வாய்த்தகராறு ஏற்பட்டது என்றும், அன்று இரவு 8 மணிக்கு நல்லமலை எங்களை பார்த்து கெட்ட கெட்ட வார்த்தைகளால் ஏசி, 2 கோடி ரூபாய் பணத்தை தாருங்கள் இல்லையென்றால் நடப்பது வேறு என்று கூறியதால், அதற்கு நாங்கள், நாங்கள் கொடுத்த பணத்தை கொடுக்கவில்லை என்றால் நீங்கள் ஊருக்கு போக முடியாது என்றும் கூறினோம் என்றும், நல்லமலை அதற்கு கோவப்பட்டு, அவரது இடுப்பில் மறைத்து வைத்திருந்த ரிவால்வரை எடுத்து எங்களைப்பார்த்து செத்து தொலைங்கல என்று சொல்லி கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் எங்களை பார்த்து மாறி மாறி சுட்டார் என்றும், அதில் 3 குண்டுகள் வெள்ளைத்துரையின் வயிற்றிலும் தொடையிலும் பட்டு ரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், அதில் வெள்ளைத்துரை மயங்கி கீழே விழுந்துவிட்டார் என்றும், அப்போது சத்தம் கேட்டு தோட்டத்தில் இருந்த நாங்கள் எல்லோரும் ஓடிப்போய் நல்லமலையை பிடித்துக்கொண்டு கையை கட்டிக்கொண்டு தூக்கிக்கொண்டு ரூம்ஷெட்டிற்குள் சென்றோம் என்றும் இது சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

ஒம்/–S.மனோஜ்குமார்
கூடுதல் மாவட்ட நீதிபதி
தென்காசி